*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2023** **21 மே 2023**

# பத்திரிகை செய்தி

ஜி20 தலைமை பொறுப்பில் இருக்கும் இந்தியா உள்ளிட்ட ஜி 20 நாடுகளில் இன்று(21-05-2023) மாபெரும் கடற்கரை தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நீடித்த, நிலையான கடல்சார் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் கடல்சார் மேலாண்மை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பிற்கான தீர்வுகளை கண்டறியவும், இது தொடர்பாக ஜி20 நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்தியாவில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் மூலமாக அனைத்து கடல்சார் மாநிலங்களிலும் கடற்கரைத் தூய்மைப் பணி நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்துறை புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டுக் குழுமத்துடன் இணைந்து கடற்கரை தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது.

புதுச்சேரி கடற்கரை காந்தி சிலை அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தொடங்கி வைத்தார். முன்னதாக, உறுதிமொழியை துணைநிலை ஆளுநர் வாசிக்க அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து பேசிய துணைநிலை ஆளுநர்,

- கடற்கரையை சுத்தப்படுத்துவோம் என்ற உறுதி மொழியுடன் இளைஞர்கள் களமிறங்கி இருக்கிறார்கள். முன்பெல்லாம் நிலத்திலிருந்து கழிவுகளை அப்புறப்படுத்த கடலில் கொட்டுவது வழக்கமாக இருந்தது. ஆனால் இன்று கடலில் கொட்டப்படும் கழிவுகள் மீன்களின் உணவுக்காக மாறி பின்பு நாமே மீன்களை உண்கிறோம் என்கிற விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அதேபோல. கடலில் கொட்டப்படும் கழிவுகளால் கடல்வாழ் உயிரினங்களும் அழிந்து வருகின்றன. இதுபோன்ற ஆபத்துக்களைக் குறைக்க பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டம் இன்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
- "உங்களுக்கு சுதந்திர இந்தியா வேண்டுமா? அல்லது தூய்மையான இந்தியா வேண்டுமா?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு "எனக்கு தூய்மையான இந்தியா தான் முதலில் வேண்டும். ஏனென்றால் சுத்தமான இந்தியா தான் உண்மையான சுதந்திரமான இந்தியா" என்று காந்தியடிகள் கூறியதை பாரதப் பிரதமர் சுதந்திரதின விழாவில் நினைவு கூறினார்.

- 'தூய்மை இந்தியா' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே சுகாதாரக் கேட்டினால் ஏற்படும் நோய்களைத் தடுத்ததன் மூலம் கிட்டத்தட்ட ரூ. 60 ஆயிரம் கோடி மிச்சப்படுத்தப்பட்டது. "சுத்தம் சோறு போடும்" என்று தமிழில் பழமொழியும் உண்டு.
- புதுச்சேரி கடற்கரை சார்ந்த மாநிலம். எனவே, புதுச்சேரியில் "கடற்கரையை சுத்தப்படுத்தும்" திட்டத்தை நிச்சயமாக கொண்டு வர வேண்டும். கடலை சுத்தப்படுத்துவதன் மூலமாக நமது குடலும் சுத்தப்படுத்தப்படுகிறது. அனைத்து உயிர்களுக்குமான சுகாதாரத்தை ஏற்படுத்தும் இந்த திட்டத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நிச்சயமாக இது இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.

என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், தேசிய மாணவர்ப் படை மற்றும் மாணவ-மாணவிகளின் விழிப்புணர்வு நடைபயணம் மற்றும் பேரணியைத் துணைநிலை ஆளுநர் தொடங்கி வைத்தார். சுற்றுச்சூழல் குறித்த பேச்சு, கட்டுரை, ஓவியம், வண்ணம் தீட்டுதல் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார்.